இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 13 | திகதி : 29.09.2024 | விலை : 50.00



## மனிதகுலம் எதைச் சாதிக்க முடியும் என்பதற்கு சிங்கப்பூர் ஓர் எடுத்துக்காட்டு

**– திருத்தந்தை பிரான்சிஸ்**

சிங்கப்பூரில் கத்தோலிக்கத் திருஅவை தோன்றிய காலத்திலிருந்தே நாட்டின் முன்னேற்றத்திற்காகக் கல்வி மற்றும் நலத்துறைகளில் அதன் தனித்துவமான பங்களிப்பை வழங்கியுள்ளதெனத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். 45 ஆவது திருப்பயணத்தை மேற்கொண்டட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த 12 ஆம் திகதி சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகக் கலாசார மையத்தில் அந்நாட்டின் அரச அதிகாரிகள், தூதரக அதிகாரிகள், பொது நிலை அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு வழங்கிய அருளுரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். சிங்கப்பூர் நாடு வளர்ச்சியின் மேம்பட்ட நிலையை எட்டியுள்ளதைக் குறிப்பிட்ட திருத்தந்தை அவர்கள், தற்செயலானதல்ல மாறாக அறிவார்ந்த முடிவுகளிலிருந்தே உருவானதெனவும், பொருளாதார ரீதியில் முன்னேறியது மட்டுமன்றி, சமூகநீதி மற்றும் பொதுநலன் உயர்வாகக் கருதப்படும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பக் கடினமாக உழைத்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் தற்போதைய டிஜிட்டல் யுகத்தின் அதிநவீன தொழில் நுட்பங்கள் மற்றும்செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டின் விரைவான முன்னேற்றங்களால் உண்மையான மற்றும் உறுதியான மனித உறவுகளை வளர்ப்பதற்கான அடிப்படைத் தேவையை நாம் மறந்துவிடக்கூடாது என்பதனை வலியுறுத்தியுள்ள திருத்தந்தை அவர்கள் தொழில் நுட்பங்கள் யாவும் புரிந்துணர்வையும் ஒன்றிப்பையும் ஊக்குவிப்பதன் வழியாக நம்மை நெருக்கமாகக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பொறுப்புணர்வு மற்றும் அனைவரையும் ஒன்றிணைக்கும் உடன்பிறந்த உணர்வுடன் , இணக்கமுடன் பணியாற்றுவதன் வழியாக, மனிதகுலம் என்ன சாதிக்க முடியும் என்பதற்கு சிங்கப்பூர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றதெனவும் தெரிவித்துள்ளார்.

## நாட்டு மக்கள் அனைவரும் "நாம் இலங்கைப் பிரஜைகள்" என்ற உரிமையோடு வாழ வேண்டும்

### புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க

மக்கள் ஆணையில் 9வது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய தனது கன்னி உரையில் சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பறங்கியராக இருந்தாலும், மலையகராக இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகைத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் செழிப்பான நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவருக்கும் "நாம் இலங்கைப் பிரஜைகள்" என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு நாடு உருவாகும்வரை இந்த நாடு தோல்வியடையுமேதவிர, வெற்றியடையாது. அதற்காக அரசமைப்பு ரீதியான, பொருளாதார, அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒருபோதும் நாம் பின்வாங்கமாட்டோம் என்றும் கூறினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு: கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக சம்பந்தப்பட்ட கடன் தரப்பினர்களுடன் பேச்சு நடத்தி, அது தொடர்பான பணிகளை விரைவில் நிறைவு செய்து, உரிய கடன் நிவாரணத்தைப் பெறுவதற்கு ப.2



## யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க வைத்தியர் அமைப்பின் அங்குரார்ப்பணம்



யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க வைத்தியர் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 08ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் நடைபெற்றது. யாழ்.மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க வைத்தியர் அமைப்பை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். ப.2

## கனடா ரொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை ஆலயத் திருவிழா



கனடா ரொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழாவும் கனடா தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் ஆரம்பிக்கப்பட்டதன் 30 ஆவது ஆண்டு நிறைவுத் திருப்பலி பணியக இயக்குநர் அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்றது. 04ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 7ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. நற்கருணைவிழா மற்றும் திருவிழாத் திருப்பலிகளை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இவ்வழிபாடுகளில் 500 ற்கும் அதிகமான மக்கள் கலந்து செபித்தனர்.

## புதிய ஜனாதிபதி கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்தார்



அநுர குமார திசாநாயக்க புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கருதினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களைச் சந்தித்து ஆசீரைப் பெற்றுக் கொண்டதோடு, நாட்டின் தற்போதைய நிலைமை பற்றியும் உயிர்த்த ஞாயிறுக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் நீதியை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றியும் இருவரும் கலந்துரையாடினர்.

## துறவிகளுக்கான கள அனுபவப் பயிற்சி



கொழும்பு அக்குவைனாஸ் உயர் கல்லூரியில் உருவாக்கப் பயிற்சி பெற்றுவரும் அருட்சகோதரிகள் அன்பிய வாழ்வு தொடர்பான கள அனுபவப்பயிற்சியை பெறும் நோக்கோடு யாழ். மறைமாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு பேராலயம் மற்றும் குருநகர் பங்குகளில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை ரவிச்சந்திரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 13ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை நடைபெற்ற இந்நிகழ்வில் அன்பியங்களைத் தரிசித்து அவர்களுடன் இணைந்து இறைவார்த்தை பகிர்வுகளை மேற்கொண்டு மக்களோடு உரையாடி அவர்களின் அனுபவங்களைப் பெற்றுக்கொண்டனர். அத்துடன் 16 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களை சந்தித்து ப.2

## மறைமாவட்ட மற்றும் துறவற சபை சிறிய குருமட அதிபர்களுக்கான உருவாக்கற் பயிற்சி



இலங்கை ஆயர் பேரவையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட மறைமாவட்ட மற்றும் துறவற சபை சிறிய குருமட அதிபர்களுக்கான தொடர் உருவாக்கப் பயிற்சி கடந்த 13, 14, 15 ஆம் திகதிகளில் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் நடைபெற்றது. இறை அழைத்தல் ஆணைக்குழுவிற்குப் பொறுப்பான கண்டி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை வலன்ஸ் மென்டிஸ் அவர்களின் தலைமையில் திருவுளப்பணியாளர் சபை அருட்தந்தை லொயிட் சாந்திகுமார் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகள், கலந்துரையாடல்கள் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் மறைமாவட்ட மற்றும் துறவற சபை சிறிய குருமட அதிபர்களென 34 பேர் பங்குபற்றியிருந்தனர்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## புதிய ஜனாதிபதியும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும்

புதிய ஜனாதிபதி தனது ஆட்சியில் பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பல திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவித்திருக்கிறார். ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற செயற்பாடுகளினால் இலங்கைத்தீவில் ஏற்பட்ட பாதிப்புகள், இழப்புகள் உலகத்துக்குத் தெரிந்த ஒன்று.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமை உள்ளிட்ட பல விடயங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பலரும் ஊழல்மோசடி அதிகாரத்துஷ்பிரயோகம் அற்ற ஒரு ஆட்சியை விரும்புகின்றனர்.

இலங்கைப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து இறக்குமதிப் பொருளாதாரத்தில் தங்கியுள்ள சூழலில் மீண்டும் உள்ளூர் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை ஊக்கப்படுத்தும் திட்டங்களுக்கு இனிவரும் நாட்களில் முக்கியத்துவம் வழங்கப்படும் என்று புதிய வெளிவிவகார அமைச்சர் கூறியிருக்கிறார்.

இந்திய, சீனா போன்ற அயல்நாடுகளையும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளையும் பகைத்துக்கொள்ளாமல் அந்த நாடுகளின் உதவிகளோடு இலங்கையை முன்னேற்றத் திட்டம் இருப்பதாகவும் கூறியிருக்கின்றமை மக்களுக்குக் குறிப்பாகச் சிங்கள மக்களுக்கு திருப்பதியான ஒன்று.

அதேவேளை பாடசாலை நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அழைத்து வருவதை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அனைத்துத் திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே, புலமைப்பரிசில் வினாத்தாள்கள் வெளியிடப்பட்டமையினால் சிறுவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்திருந்தார்.
இதன்போது கருத்து வெளியிட்ட பிரதமர்,

பாடசாலைக் கல்வியின் வளர்ச்சி தற்போதைய அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். எங்கள் அரசாங்கத்தின் கீழ் கல்விக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளோம்.

கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைத்திணைக்களம் தொடர்பில் மக்கள் மத்தியில் எழுந்துள்ள அவநம்பிக்கையைக் களைவதற்கு இந்த நிறுவனங்கள் செயற்பட வேண்டும்.

குறிப்பாக, தேர்வுகள் நடத்துதல் மற்றும் முடிவுகளை வழங்குதல் ஆகியவற்றை விரைவுபடுத்த வேண்டும். ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது முறையான முறையின் மூலம் செய்யப்பட வேண்டும்.

மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் பணி வெற்றிடங்கள் வெளிப்படைத் தன்மையுடன் நிரப்பப்பட வேண்டும். பாடசாலை தரப்பிலிருந்து எனக்கு ஒரு சிறிய முன்மொழிவு உள்ளது.


ஆனால் அதை ஒரே செய்ய முடியாது. பாடசாலைகளில் மனநலம் மற்றும் மன அசௌகரியம் போன்ற பிரச்சனைகளை தன்னிடம் தெரிவித்துள்ளதாகப் பிரதமர் கூறியுள்ளார்.

ஆகவே புதிய அரசாங்கம் மக்கள் நலனிலும் பாடசாலை மாணவர்கள் நலனிலும் தமது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் இந்த நல்ல எண்ணத்துடன் அரசாங்கம் தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

அத்துடன் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்களிலும் நீதியான தீர்வுக்கு முன்வர வேண்டும். எதிர்கட்சியில் இருந்து விமர்சித்தமை போன்று அரசாங்கத்தின் பிரதான ஆட்சியாளர் அந்தஸ்திலிருந்து கொண்டு இனிமேலும் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு எதிரான கருத்துக்களைக் கூறாமல் உருப்படியான செயற்திட்டங்களில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# வன்முறைகளைத் தூண்டும் வழிமுறைகளாக மதங்கள் மாறக்கூடாது - திருத்தந்தை



திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்களால் அசிசியில், அமைதிக்கான முதல் கூட்டம் ஆரம்பித்து 38 ஆண்டுகள் நிறைவுற்றநிலையில், திருஅவைத் தலைவர்கள், பிற மதத் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில், இப்போது நாம் உலகை அழித்துக் கொண்டிருக்கிறோம், அதனை நிறுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

போரை நிறுத்துங்கள் என்னும் அவர்களின் குரலோடு தானும் இணைவதாகத் தெரிவித்துள்ள திருத்தந்தை, "கடந்த காலங்களில் மோதல்கள் மற்றும் போர்களைத் தூண்டுவதற்கு மதங்கள் பயன்படுத்தப்பட்டன எனவும், இச்செயல் நம் நாட்களிலும் தொடர்கிறது என்றும், புனித அசிசியாருடைய உள்ளுணர்வின் தாக்கத்தால் பாரிசில் நடைபெற்ற இந்தச் சந்திப்பானது, மக்களிடையே உடன் பிறந்த உணர்வை வளர்க்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

"மதங்கள் ஒருபோதும் போர், வெறுப்பு அணுகுமுறைகள், பகைமை, தீவிரவாதம், வன்முறை ஆகிவற்றைத் தூண்டக்கூடாது என்றும், இந்தத் துயரமான உண்மைகள், மதப் படிப்பினைகளிலிருந்து விலகியதன் விளைவாகும் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை.

மேலும், மதங்களை அரசியல் ரீதியாகக் கையாள்வதிலிருந்தும், வரலாற்றின் அடிப்படையிலும், அனைவரின் இதயங்களிலும் உள்ள மத உணர்வுகளை தங்களுக்கு ச் சாதகமாக்கிக் கொண்ட மதக் குழுக் களின் சுயநல விளக்கங்களாலும் வன்முறைகள் விளைகின்றன என்றும் தெரிவித்தார்.

தேசியவாதம், இனவாதம் போன்ற வன்முறைகளைத் தூண்டுவதற்கான வழிமுறைகளாக, மதங்கள் ஒருபோதும் மாறக்கூடாது என்றும் வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போர்களில் இறைவனைக் கொண்டு வர முயற்சி செய்யக் கூடாது என்றும் இதனால் போர்கள் மட்டுமே அதிகமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

அடிப்படைவாதங்கள், சண்டை சச்சரவுகளால் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்கள், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், தொற்று நோய்களின் தாக்கங்கள் என்ற தற்கால மாற்றங்களுக்கு மத்தியில் வாழும் நாம், இவை அனைத்தும் நம்மை எங்கு இட்டுச் செல்லும் என்பது பற்றிய தெளிவான சிந்தனை இல்லாமல் இருக்கிறோம் என்றார்.

சமூகத்தில் உடன் பிறந்த உணர்வைக் கட்டியெழுப்புவதற்கும், நீதியைப் பாதுகாப்பதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க வேண்டுமெனவும், அமைதிக்காக ஜெபிக்க வேண்டும் என்றும் தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

# பாசையூரில் தேசிய இளையோர் வாரம்



பாசையூர்ப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட தேசிய இளையோர் வாரச் சிறப்பு நிகழ்வுகள் கடந்த 08ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை நடைபெற்றன பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 08 ஆம் திகதி இளையோர் ஒன்றியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வுகளில் திருப்பலிகள், நற்கருணைப் பவனி, நடை பவனி, விழிப்புணர்வுத் தெரு நாடகம், மகிழ்வூட்டல் நிகழ்வுகள், இளையோருக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள், அயற்பங்கு இளையோருடனான கலந்துரையாடல், தீப்பாசறை என்பவை இடம்பெற்றன.

இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றதுடன் அன்றைய தினம் காலை அருட்தந்தை ஜீவா போல் அவர்களின் தலைமையில் சிறப்பு திருப்பலியும் தொடர்ந்து மாலை கலை நிகழ்வுகளுடன் இளையோருக்கான நடனப்போட்டி மற்றும் இவ்வாரத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றன.

இக்கலைநிகழ்வில் யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை பாலதாஸ் பிராயன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ். மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்தந்தை யாவிஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததுடன் 100 வரையான இளையோர் இந்நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

## நூல் வெளியீட்டு விழா

பாவலர்மணி திருமகள் ரூபா அன்ரன் அவர்களின் 'திருவருள் இயேசு அந்தாதி' எனும் மரபுக் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு இம்மாதம் 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.

அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை ஜீவா போல் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து நூலை வெளியிட்டுவைக்க நூலுக்கான நயப்புரையை இந்திய நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரும் திரைப்பட இயக்குநருமான முனைவர் பாரதி கிருஸ்ணகுமார் அவர்கள் வழங்கினார்.

## கிளரேசியன் சபை அருட்சகோதரர்களின் நித்திய அர்ப்பண வார்த்தைப்பாடு

கிளரேசியன் சபை அருட்சகோதரர்களின் நித்திய அர்ப்பண வார்த்தைப்பாட்டுத் திருச்சடங்கு 05ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை வவுனியா பம்பைமடு இறையிரக்க ஆலயத்தில் நடைபெற்றது.

சபையின் இலங்கைக்கான முதல்வர் அருட்தந்தை ஜெயசீலன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் அருட்சகோதரர்கள் அஜந்தன் குலாஸ், இருதயராஜ் லியோன், கிங்சிலி சுரேஷ், மெறின்ராஜ், ஸ்ரிபன்ராஜ் மொறைய்ஸ் ஆகியோர் நித்திய அர்ப்பண வார்த்தைப்பாட்டை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகள்,அருட்சகோதரர்கள் குடும்ப உறுப்பினர்களென பலரும் கலந்து அருட்சகோதரர்களுக்காகச் செபித்தனர்.

### யாழ். மறைமாவட்ட..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வைத்தியர்களுக்கான ஒன்றுகூடல் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், வைத்தியர்களென பலரும் பங்குபற்றியிருந்தனர். இவ்வமைப்பை உருவாக்குவது தொடர்பான முன்னாயத்த கூட்டம் கடந்த 25ஆம் திகதி Zoom செயலி ஊடாக இடம்பெற்றதுடன் தற்போது 60றக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இவ்அமைப்பின் அங்கத்தவர்களாக இணைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### துறவிகளுக்கான...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயரின் ஆசீரை பெற்றுக்கொண்டதுடன் சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தலத்தையும் தரிசித்தார்கள்.

6 நாடுகளின் 12 துறவற சபைகளை சேர்ந்த 33 அருட்சகோதரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டதோடு யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து அவரின் ஆசீரையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# திசை காட்டி காட்டுமா...?

**இ.இ.வசீகரன்**

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்துள்ளது. காலாதி காலமாக இலங்கையின் அரச தலைவர்களாக சிம்மாசனம் ஏறிய வலதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் கையசைத்து விடை கொடுத்துவிட்டு, இடதுசாரிக் கட்சியைச் சார்ந்த இடதுசாரி மேன்மை தங்கிய அனுரகுமார திசாநாயக்க அவர்களை இலங்கை மக்கள் ஆட்சிப்பீடத்தில் அமர வைத்துள்ளனர்.

இலங்கை மக்களின் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய தீர்க்கதரிசனப் பார்வையும் அரசியல் முதிர்ச்சியும் புதியதொரு மாற்றுத் தலைமைத்துவத்தைத் தெரிவு செய்வதற்கு வழிகோலியுள்ளது.

இலங்கை மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? அல்லது நிறைவேற்றப்படுமா? 'இன, மத, மொழி பேதமற்ற அழகான நாடு' என்ற கோசம் கனவாகாது நனவாகுமா? என்பதைச் சற்றுப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். திசைகாட்டி, திசைகாட்ட வேண்டும் என்பதே தாய்த்திருநாட்டை நேசித்து ஆணை வழங்கிய அனைத்துப் பிரசைகளினதும் தார்மீக வேண்டுகோளாகும்.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக இடதுசாரி சமவுடமைக் கொள்கையுடைய தலைமைத்துவம் தலை நிமிர்ந்துள்ளது. இலங்கையின் அரசியல் கட்சி வரலாற்றில் முதலாவது அரசியல் கட்சியாக 1935ம் ஆண்டு தோற்றம் பெற்ற லங்கா சமசமாஜக் கட்சி ஒரு இடதுசாரிக் கட்சியாகும். அக்காலகட்டத்தில் டொனமூர் அரசியல் திட்டம் வழங்கிய சர்வஜன வாக்குரிமையின் பின்னணியில் அரசியல் கட்சிகள் தோன்ற வேண்டிய சூழல் இலங்கையில் ஏற்பட்டது. அந்நேரம் ரஷ்ய பல்கலைக்கழகத்தில் கம்யூனிசக் கொள்கைகளைக் கற்றுக் கலாநிதிப் பட்டம் பெற்று நாடு திரும்பிய கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின், ஆர்.டி.சில்வா போன்றோரால் இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி தோற்றுவிக்கப்பட்டுப் பின்னர் போல்சவிக் லெனின் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பன தோற்றம் பெற்றன. அந்த வகையில் இலங்கையின் அரசியல் கட்சி வரலாறு இடது சாரிக் கொள்கையுடனேயே ஆரம்பிக்கப்பட்டமை நோக்கத்தக்கது. எனினும், இடதுசாரிகள் ஆதிக்கம் பெற்று இன்றுவரை ஆட்சிப் பீடங்களை அலங்கரிக்கவில்லை என்பதே இங்கு கோடிடப்பட வேண்டிய விடயமாகும்.

இந்நிலையைத் தற்போது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மேன்மைதங்கிய அனுரகுமார திசாநாயக்க மாற்றியமைத்து இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். இவர் சார்ந்த ஜே.வி.பி. அரசியல் கட்சி ஆரம்பால இலங்கை அரசியல் வரலாற்றில் ஆயுதம் தாங்கிய புரட்சிகரக் கட்சியாக 1980 கள் வரை பயணித்தது. பின்னர் அக்கட்சியின் தலைமைத்துவம் அழிக்கப்பட்ட நிலையில் 90களின் முற்கூறில் அக்கட்சி ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் அவர்களுடன் இணைந்து போட்டியிட்டு அதிகப்படியான ஆசனங்களையும் பெற்றுக் கொண்டு, தன் அரசியல் பாதையில் அகலக்கால்பதித்து நின்றது.

இத்தகைய சூழ்நிலையில் அக்கட்சி சார்ந்து அதன் பிரதிவிம்பமாகத் தேசிய மக்கள் சக்தி என்னும் அரசியல் கட்சியை உருவாக்கி அதற்குத் தலைமைத்துவம் தாங்கிக் கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் நான்கு ஆசனங்களுடன் பாராளுமன்றம் பிரவேசித்த நிலையில்தான் இன்று ஜனாதிபதி என்ற நிலைக்கு அக்கட்சி வரலாற்றுத் திருப்பு முனையைச் சந்தித்துள்ளது.

சமவுடமைக் கொள்கைகள் இலங்கையின் அரசியலை எவ்வகையில் உகந்ததாக இருக்கும் என அரசியல் அவதானிகளிடையே பல்வேறுபட்ட விமர்சனங்கள் நிலவினாலும் இந்நாட்டின் அரச இயந்திரத்தின் கொள்கை வகுப்பிலும் செயற்திறனிலும் மாற்றத்தை எதிர்பார்த்துத் தங்களுக்கு ஆணை வழங்கிய மக்களின் குறிப்பாக தென்னிலங்கை மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டிய பாரிய பொறுப்பு அரச தலைமைத்துவத்தின் கைகளில் உள்ளது.

நாட்டின் அரசியல் பொருளாதாரத் தளம்பல்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் அந்நிலைகளைச் சமன் செய்வதிலுள்ள சவால்களை எதிர்கொண்டு முனைப்புடனும், கூர்மையுடனும் செயலாற்றும் வல்லமை தாம் தெரிவு செய்த இளம் தலைவருக்கு இருப்பதாக இலங்கை மக்களும் நம்புகின்றனர். சர்வ தேசமும் நம்புகின்றது.

சமவுடமை வாதத்தில் சமத்துவம் என்பது தாரக மந்திரமாக விளங்குவதால் ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்குப் புதிய ஆட்சியில் புத்துருவம் கிடைக்கும் எனக் காத்திருக்கின்றனர். இலங்கையிலுள்ள பெரும்பான்மை இனத்தவரைப் போன்று சிறுபான்மை இனத்தவரும் வாழ்வதற்கான ஏதுநிலைகள் புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஈழத்தமிழர்களிடையே நிறைந்திருக்கிறது.

இன, மத, மொழி பேதமற்ற அழகிய நாடாக இந்நாடு விளங்க வேண்டுமாயின், காலாதிகாலமாக இன ஒடுக்குமுறைக்கும் இனப் படுகொலைக்கும் உள்ளாக்கப்பட்டு வரும் ஈழத்தமிழினத்தின் உரிமைகள் முழுமையாக வழங்கப்பட்டு வலிசுமந்து வாழும் தமிழினத்தின் வலிகளுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய தீர்வுத் திட்டங்கள் புதிய ஆட்சிப்பீடத்தினால் கட்டமைக்கப் படுமாயின் அதுவே இந்த நாட்டின் சுபீட்சத்திற்கான அடிப்படையாக அமையும்.

மேற்படி விடயத்தை ஜனாதிபதி அவர்களும் தனது உரையில் சுட்டிக்காட்டத் தவறவில்லை. நாம் இலங்கைப் பிரஜைகள் என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச் சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றி அடையாது. அதற்காக அரசமைப்பு ரீதியான பொருளாதார அரசியல், மறு சீரமைப்புகளை மேற்கொள்ள ஒருபோதும் நாம் பின்வாங்க மாட்டோம் என அவர் சூளுரைத்துள்ளார். இத்தகைய பின்னணியில் பல்வகைத் தன்மை மிக்க செழிப்பான நாட்டைக் கட்டமைத்துக் கட்டியெழுப்புவோம் என அவரது கன்னி உரை அமைந்திருந்தது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்கள் தமது வாக்குகளைத் தமிழினம் சார்ந்து போட்டியிட்ட தமிழ் வேட்பாளரான திருவாளர் அரியநேந்திரன் அவர்களுக்கு வழங்கியிருந்தனர். தமிழினம் சார்ந்து ஒருவர் போட்டியிடும்போது அவரை உதறித் தள்ளி உதாசீனம் செய்துவிட்டு மற்றுமொருவருக்கு வாக்கினை வழங்குவது என்பது தமிழின உணர்வுக்கு அபத்தமானது என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டதன் விளைவாகவே தமிழர் பிரதேசங்களில் தமிழ் வேட்பாளர் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருந்தார். இதனை மாறுக் கண்கொண்டு நோக்காது தமிழினம் தன் இன உணர்வுக்கு அளித்த மாண்பாக அரச தலைவர் உட்பட இலங்கை வாழ் மக்கள் அனைவரும் புரிந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எது எவ்வாறாக இருப்பினும் தமிழினம் தன் முகவரி தொலைக்காது தம் இருப்பை நிலை நாட்டி சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய சுபீட்சமான எதிர்காலத்திற்கு அரச தலைவர் அத்திவாரம் இடுவார் என்று உதய திசை நோக்கி தமிழ் மக்களாகிய நாம் காத்திருக்கின்றோம்.

**இதயம் எங்கே அச்சமின்றி உள்ளதோ**
**எங்கே தலை நிமிர்ந்து நிற்கிறதோ,**
**சிறைவாசமின்றி**
**அறிவு வளர்ச்சிக்கு**
**எங்கே பூரண**
**விடுதலை உள்ளதோ,**
**குடும்பத்தின் குறுகிய தடைப்பாடுகளால்**
**வெளி உலகின் ஒருமைப்பாடு**
**எங்கே உடைபட்டு**
**துண்டுகளாய்ப்**
**போய்விடவில்லையோ,**
**வாய்ச் சொற்கள் எங்கே**
**மெய்நெறிகளின்**
**அடிப்படையிலிருந்து**
**வெளிப்படையாய் வருகின்றனவோ,**
**விடாமுயற்சி எங்கே**
**தளர்ச்சியின்றி**
**பூரணத்துவம் நோக்கி**
**தனது கரங்களை நீட்டுகிறதோ,**
**அடிப்படை தேடிச்செல்லும்**
**தெளிந்த அறிவோட்டம் எங்கே**
**பாழடைந்த பழக்கம் என்னும்**
**பாலை மணலில்**
**வழி தவறிப்**
**போய்விட வில்லையோ,**
**நோக்கம் விரியவும்,**
**ஆக்கப் பணி புரியவும்**
**இதயத்தை எங்கே**
**வழிநடத்திச் செல்கிறாயோ – அந்த**
**விடுதலைச் சுவர்க்க பூமியில்**
**எந்தன் பிதாவே!**
**விழித்தெழுக**
**என் தேசம்!**

என்ற ரவீந்திரநாத தாகூரின் கீதாஞ்சலிப் பிரார்த்தனையை தமிழ் மக்களாகிய நாமும் மௌனத்தில் பிரார்த்திப்போம்.

---




'அம்மா' என்றதுமே ஆயிரம் உணர்வுகள் எழுகின்றன நம் எண்ணத்திலும் உள்ளத்திலும். தாய்க்கு, அவள் தாய்மைக்கென்று தனிப் பெரும் ஆற்றல் உண்டு. தளிரை வளர்த்து, தரணியைத் தழைக்கச் செய்பவள் அவளே! அன்னை மரியாவின் பெருமையைக்கூறும் 'அருள்நிறை மரியம்மை காவியத்தில்' கவிஞர் துரை. மாலிறையன்...

**'தாயெனில் பற்று உண்டு**
**தனிப்பெரும் பரிவு உண்டு!**
**தோயும் வாய்மை உண்டு**
**தொடர்வலி வளர்ச்சி உண்டு!**
**தூயவர் தோற்றம் உண்டு**
**துறக்கமும் அருகில் உண்டு!**
**நேயமும் நெகிழ்வும் உண்டு**
**நிலைத்த எப்பேறும் உண்டு!** என்கிறார்.

அன்னையின் சிறப்பே நிலையான பேற்றினை வழங்குவதே! அந்த அன்னையில் பாத்திமா திருக்காட்சியைக் குறிப்பிடும் அவர்,"இரு கைகள் குருசைப் போல இருக்கவும் வலக்கை தன்னில் திருச்செபமாலை முத்துத்திகழவும் வெண்மையான உருச்சுடர் அங்கி ஆடை ஓரத்தில் தங்கத் தோடும் திருத்தலை முக்காட்டோடும் தெரிந்தனர் அம்மையாரே!' என்று குறிப்பிடுகிறார். அந்த அன்னை தந்த திருச் செபமாலை ஆயிரமாயிரம் அருள்வரங்கள் பெற்றுத்தரும் அருளின் வாய்க்கால். ஆகவே, அன்றாடம் திருச்செபமாலை செபிக்க அழைக்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். "இது நம் இதயத்தின் செபம்" என்றும், "நம் வாழ்வோடு இணைந்த செபம்" என்றும், "இதுவே எளியோரின் மற்றும் புனிதர்களின் செபம்" என்றும் குறிப்பிடும் அவர், "எல்லாரும் குறிப்பாக நோயுற்றோர் தங்களின் துயர வேதனைகளில் அன்னையின் அரவணைப்பைப் பெற அவரிடம் அண்டிவரஅழைக்கிறார்.

தாய்மையின் அளப்பரிய செயல்களை விண்ணகத்தில் தொடரும் நம் அன்னை மரியாவை மகிமைப்படுத்த 9-ஆம் நூற்றாண்டில் பெனடிக்ட் துறவற சபையினரால் தொடங்கப்பட்டு, பின்பு தொமினிக்கன் சபையினரால் உலகெங்கும் பரப்பப்பட்ட பக்தி முயற்சிதான் இந்தச் செபமாலை செபிக்கும் முறை. இப்பக்தி முயற்சியை யாவரும் பின்பற்ற திரு அவை வழிகாட்டியபோதும், அன்னை மரியாவே மே 13, 1917 அன்று பாத்திமா நகரில் காட்சி தந்து 'உலக அமைதிக் காகவும், உலகில் போர்கள் முடிவடையவும்' செபிக்க நம்மை அழைக்கிறார். அருள் வரங்களைப் பெற்றுத்தரும் இப்பக்தி முயற்சி "நற்செய்தியை முழுமையாகத் தியானிக்கும் செயல்" என்கிறார் திருத்தந்தை புனித ஆறாம் பவுல். "அன்னை மரியாவையும், அவரின் அன்பு மகன் இயேசுவையும் ஒருசேர மகிமைப்படுத்தும் இப் பக்தி முயற்சி 'தாய் - சேய்' தியான முறை மைக்கு வழி காட்டுகிறது! இப்பக்தி முயற்சி, (தொதீமையின் ஆதிக்கத்திலிருந்து நாம் வெற்றி கொள்ள வழிகாட்டும் ஆன்மிகக் கருவி (Spiritual Weapon) என்கிறார் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல்.இத்தகைய செபமாலை பக்தி முயற்சியை மக்கள் உள்ளங்களில் வளர்த்து, அன்னையின் அருள்தலம் கூடிடுவோம்! அவர் திருப்புகழ் பாடிடுவோம்! அருள் வரங்கள் பெற்றிடுவோம்!

# அருளடையாளங்கள்

## ஓர் உளவியல் ஆன்மீகப் பார்வை



**அறிமுகம்**

கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாகவும். அதன் சாரமாகவும் இருப்பவை அருளடையாளங்கள் திருவருள் சாதனங்கள்). எல்லாவிதமான கிறிஸ்தவக் கொண்டாட்டங்களின் மையமாக இருப்பதும் அருளடையாளக் கொண்டாட்டங்களே! இன்றைய சூழலில் பல வேளைகளில் நிகழும் அருளடையாளக் கொண்டாட்டங்கள் (திருப்பலி, திருமுழுக்கு. முதல் நற்கருணை. உறுதிப் பூசுதல். திருமணம், குருத்துவம் முதலியவை) சடங்காச்சாரமாகவும், ஆடம்பர நோக்கத்துடனும், தனிமனித மற்றும் குழுக்களின் பெருமைக்காகவும் கொண்டாடப்படுகின்றன. அருளடையாளக் கொண்டாட்டங்களின் எண்ணிக்கையும், அருட்பணியாளர்களின் எண்ணிக்கையும் அவசியமில்லாமல் அதிகரிக்கப்படுகின்றன.

இது கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வின் பெரும் ஆபத்தான அணுகு முறை என்பது முற்றிலும் உண்மை. இத்தகைய அணுகுமுறையின் காரணமாக அருளடையாளங்களின் வாழ்வியல் நோக்கமும், அவற்றிற் கும் நம் வாழ்விற்குமான தொடர்பும் மற(றை)க்கப்பட்டு. சடங்காச்சாரப் போக்கு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இது நம் ஆன்மீக வாழ்வில் தேக்கத்தையும். ஒட்டுமொத்த வாழ்வில் மேலோட்டத்தன்மையையும் கொண்டு வரவல்லது.

அருளடையாளங்களுக்கும், நம் வாழ்விற்குமான தொடர்பை உளவியல் பின்னணியிலும், ஆன்மிகப் பின்னணியிலும் அணுகும் வண்ணம் மேற்கொள்ளப்படும் முயற்சியே இத்தொடர்! உரையாடலாக எழுதப்படும் இந்தத் தொடர் குறித்த உங்களது மேலான கருத்துகளும் பரிந்துரைகளும் வரவேற்கப்படுகின்றன.

**1.வாழ்வின் நிறைவைத் தேடி...**

அது ஒரு கத்தோலிக்கக் குடும்பம். குடும்பத் தலைவர் பெயர் அன்புச் செல்வன். ஒரு கல்லூரியில் உளவியல் பேராசிரியர். நல்ல கத்தோலிக்கர். ஞாயிறு திருப்பலிக்குத் தவறாதவர். கத்தோலிக்க மறைப் போதனைகளை உளவியல் பின்னணியில் அணுக முயல்பவர். அவரது மனைவி மார்த்தா. குடும்பத் தலைவி. கத்தோலிக்க மறைப்போதனைகளை ஏன்? எதற்கு? என்ற கேள்விகள் கேட்காமல் கடைப்பிடிக்க வேண்டும் என்ற மனநிலை கொண்டவர்.

முன்னோர்கள் நமக்கு ஒரு காரியத்தைச் சொல்லிக் கொடுத்தார்கள் என்றால், தவறானவற்றையா நமக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்? என்று எண்ணக்கூடிய மரபுப் பெண் அவர். இவர் தினத் திருப்பலியிலோ, நவநாள் செபங்களிலோ கொஞ்சமும் தவறாமல் பங்கெடுக்கக்கூடியவர்.

அண்மையில் இவர்களது குடும்பத்தில் ஒரு பிரச்சினை. பக்தியான இத்தம்பதியினருக்குப் பிறந்த அவர்களது மூத்த மகன் அகஸ்டின் ஒழுங்காகக் கோவிலுக்கு வருவதில்லை. கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் அவன், அவ்வப் போது 'கோவிலுக்குப் போவதால் என்ன பயன் உண்டு? நேரம்தான் வீணாகிறது' என்ற ரீதியில் பேச ஆரம்பித்திருக்கிறான். திறந்த மனமும் தேட லும் கொண்டவன். மதம் உட்பட எல்லாவற்றையும் கேள்விக்குட்படுத்துவதில் தவறு எதுவும் இல்லை என்று எண்ணுபவன். கேள்விகள் கேட்டால்தான் சரியானவற்றைக் கண்டு கொள்ள முடியும் என்று நினைப்பவன்.

இவனது தங்கை கிறிஸ்டினா 11-ஆம் வகுப்பு படிப்பவள். தற்போது அவளும் ஆலயச் செயல்பாடுகளில் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை. அதிக நேரத்தைப் படிப்பிலும் அலைபேசியிலும் செலவழிக்கிறாள். தாய் இதைக் குறித்துக் கேட்டால், "எனக்கு எது பயனுள்ளதோ, அதில் நேரம் செலவழிக்கிறேன். கோவிலுக்குப் போவதால் என்ன பயன் இருக்கிறது?" என்று எதிர்கேள்வி எழுப்புகிறாள்.

பெற்றோர்கள் இருவரும் தங்களது பிள்ளை களை நினைத்துக் கொஞ்சம் கவலைப்பட ஆரம்பித் திருக்கிறார்கள். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கத்தோலிக்க நம்பிக்கையைத் தங்களது பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியாதோ என்ற கேள்வி அவர்களைக் குடைந்தெடுக்க ஆரம்பித்திருக்கிறது. பிள்ளைகளின் ஆன்மிக வாழ்விற்கு எந்த முறையில் வழிகாட்டுவது என்று தெரியாத குழப்பம் அவர்களை வருத்தியது.

இத்தகைய சூழ்நிலையில்தான் அருள்பணியாளர் தாமஸ் வீடு சந்திக்க வந்தார். அவர்களின் பங்குத்தந்தை அவர்! அண்மையில்தான் மாற்றலாகி இந்தப் பங்கிற்கு வந்திருக்கிறார். அவரிடம் சற்று நேரம் பேசிய பின்பு, மார்த்தா தன் வீட்டுச் சூழலை அவருக்கு எடுத்துச் சொன்னார். அருட்பணி யாளர் தாமஸ் கத்தோலிக்கப் போதனைகளைக் கடமையாகக் கடைப்பிடிக்கக் கூடாது. மாறாக, அவை அனுபவமாக மாற்றப்பட வேண்டும். மாற்றப்பட முடியும் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டவர். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றவர். ஆழமான ஆன்மீகத் தேடல் கொண்டவர்.

***இதோ உரையாடல் ஆரம்பிக்கிறது:***

*அன்புச் செல்வன்:* "தந்தையே, என் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு ஏற்ற பொருளாதார வளத்தை என்னால் முடிந்த அளவிற்கு அமைத்துக் கொடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். அவர்களது கல்விக்கும் ஒரு சரியான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் என்கின்ற உணர்வு என்னிடம் உண்டு. ஆனால், அவர்களது ஆன்மீக வாழ்வைப் பொறுத்த அளவில்தான் தற்போது நானும், என் மனைவியும் குழப்பத்தை அனுபவித்து வருகிறோம். அவர்களது ஆன்மிக வாழ்விற்கு ஏற்ற அடித்தளத்தை அமைத்துக் கொடுக்காமல் போய்விடுவோமோ என்கின்ற அச்சம் எங்களிடம் தற்போது தோன்றியிருக்கிறது."

*மார்த்தா:* "தந்தையே, எங்களது மகனுக்கும் மகளுக்கும் கொஞ்சம் நல்லா புத்தி சொல்லுங்களேன்! ஆலயத்திற்கு வருவது என்றாலே இருவருக்கும் வேப்பங்காயாகக் கசக்கிறது."

*அருட்பணி:* "உங்களது பிள்ளைகளுக்கு அதிகமாகத் தேவைப்படுவது புத்திமதி அல்ல. மாறாக, சரியான புரிதல் என்று எண்ணுகின்றேன்.'

*அகஸ்டின் :* "தந்தையே, என் அம்மா சொல்வது உண்மைதான்! ஆலயத்திற்கு வருவது பெரிய கடினமான காரியமாக இருக்கிறது. இவ்வாறு வருவதில் என்ன பயன் இருக்கிறது என்று என் மனம் அடிக்கடி கேட்கிறது."

*அருட்பணி:* "அகஸ்டின், உன்னைப் பொறுத்த அளவில் நேரத்தைப் பயனுள்ளதாக செலவழித்தல் என்பது என்ன?" முறையில்

*அகஸ்டின் :* "எனக்கு எது மகிழ்ச்சியையும் நிறைவையும் கொடுக்குமோ,அதில் நேரத்தைச் செலவிடுவதே நேரத்தைப் பயனுள்ள முறையில் செலவழிப்பதாகும். உதாரணமாக, நண்பர்களோடு ஜாலியாக ஊர் சுற்றினால் அதில் ஒருவிதமான மகிழ்ச்சி கிடைக்கிறது. படிப்பதற்கும். அறிவைச் சேகரிப்பதற்கும் என் நேரத்தைச் செலவழித்தால், அது தற்போது என் அறிவு விரிவடைவதற்கும், பிற்காலத்தில் பணமும் புகழும் பெறுவதற்குக் காரணமாக இருக்கி றது. எனவே, கல்வியில் நேரம் செலவழிப்பது எனக்குத் திருப்தியைத் தருகிறது. மாலை வேளையில் என் நண்பர்களோடு விளையாடுகிறேன். எனக்கு அது நல்ல பொழுது போக்காகவும், உடல்நலனைப் பெருக்குவதாகவும் அமைகிறது. ஆனால், ஆலயத்திற்கு வருவதால் அத்தகைய எந்த விளைவும் ஏற்படுவதாக எனக்குத் தோன்றவில்லை, தந்தையே!"

*கிறிஸ்டினா:* "எனக்கு மொபைலில் விதவித மான வீடியோக்கள் பார்ப்பதும், என் ஸ்டேட்டஸைப் பலரும் பார்ப்பதை இரசிப்பதும் மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது."

*மார்த்தா:* "பாருங்க பாதர், எவ்வளவு துணிச்சலோடு இந்த இரண்டு பேரும் 'கோவிலுக்கு வரு வதனால் எந்தப் பயனும் இல்லை'ன்னு உங்ககிட்டே சொல்றாங்க. இந்த அளவுக்குச் சுதந்திரம் கொடுத்து வளர்த்தது எங்க தப்பு!"

*அருட்பணி:* "மார்த்தா. ஆன்மிகம் என்பது திணிக்கப்படுவதல்ல, அது உணரப்படுவது. நமக்குக் கொடுக்கப்பட்ட சில வழிமுறைகளை அவர்கள் மீது திணிப்பது எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். அவர்களது கேள்விகளுக்கு நாம் எல்லாருமே சேர்ந்து பதில் தேடுவதே அவர்களுக்கும் உதவியாயிருக்கும், நம்மையும் வளர்த்தெடுக்கும்."

*மார்த்தா:* "சரிங்க பாதர், நீங்க அவங்ககிட்ட என்ன பேசினாலும் சரி, எப்படிப் பேசினாலும் சரி, கோவிலுக்கு மட்டும் வரவச்சிருங்க. எனக்கு அது போதும்."

*அருட்பணி:* "அகஸ்டின், மகிழ்ச்சியைத் தரும் செயல்களையே மனம் நாடுவதாகவும், அத்தகைய செயல்கள் எதுவும் ஆலயச் செயற்பாடுகளில் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் கூறினாய். மகிழ்ச்சியைப் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம். மகிழ்ச்சியைப் பற்றிப் பேசும்போது இரண்டு காரியங்களை நாம் நம் மனத்தில் வைத்திருப்பது அவசியம்." ●

---



சிறுகதை

# வலியின் அன்னை!

**திரு.சிறில்**

அன்னை, நோயாளிகள் நிறைந்த அந்த அறைக்குள் நுழைந்தாள். அவள் முகம் ஏதோ சிறுமி வரைந்த ஓவியம் போல் இருந்தது. சேலையின் கலைந்த மடிப்பைப் போல அவள் முகங்களில் அலை அலையாய் வரிகள் இருந்தன. அவள் கண்கள் அந்த முகத்துக்கு ஒளியூட்டின. அவள் உதட்டில் புன்னகை இல்லை. அவள் முகமே ஒரு புன்னகைபோல இருந்தது. சாந்தமான ஒரு துறவியைப்போல அல்லாமல், ஒரு செயல் வீரனைப்போல அவள் நடை இருந்தது.

நாற்பது படுக்கைகள் இருந்த அந்த அறை மருந்தின் நெடியால் நிறைந்திருந்தது. அவளுக்கு அந்த நெடி ஒருபொருட்டல்ல. அவள் சாக்கடைகளில் கிடந்தவர்களை மீட்டிருக்கிறாள். தோலும் சதையும் அழுகிய மனிதர்களைச் சுத்தம் செய்திருக்கிறாள். சேரிகளில் பணி செய்திருக்கிறாள். அவள் உடலில் அழுக்கு ஏற ஏற, அவள் ஆன்மா தூயதாகிக் கொண்டிருந்ததை உணர்ந்திருக்கிறாள்.

அறையின் கடைசிப் படுக்கையருகே வந்தாள் அன்னை. அவர் பெயர் அலோக். ஷாலிமார் இரயில் நிலைய அதிகாரி அன்னையை அழைத்து "இங்கே ஒருவன் கிடக்கிறான், வந்து எடுத்துச் செல்லுங்கள், நீண்ட நாள்கள் தாங்கமாட்டான்" என்றார். அன்னை அவரை எடுத்து வந்து பத்து மாதங்கள் ஆகிவிட்டன. அலோக் அதிகம் பேசவில்லை. அவர் உடல் முழுவதும் புண்கள். கழுத்தில் கிரிக்கெட் பந்து அளவில் ஒரு கட்டி. வயது அறுபது இருக்கும். உடல் மெலிந்து சருகுபோல இருந்தார்.

காப்பகத்துக்கு வந்த சில நாட்களில் புண்கள் குணமாகிவிட்டிருந்தாலும், தொண்டையின் கட்டியால் அவரால் அதிகம் பேச முடியவில்லை. பேசும்போது காற்று போல ஒலிக்கும் அவரது குரல். அருகே நின்றால் அவர் சொல்வது தெளிவாகக் கேட்கும். கடந்த மூன்று மாதங்களாக மீண்டும் உடலில் புண்கள் தோன்ற ஆரம்பித்தன.

அன்னை அவர் அருகே அமர்ந்தார். அவர் கண் விழித்து அன்னையைக் கண்டார். 'வலி.. வலி..' எனக் காற்றில் சொன்னார். அன்னை அவரது முகத்தைத் தொட்டு தடவினாள். அவர் ஒருகணம் தாயின் கையில் குழந்தையைப் போல உணர்ந்தார். அன்னை அவர் கைகளைப் பிடித்தபடி கண்மூடிச் செபித்தாள். பின்னர் அவரிடம் "அலோக், வலியை இன்பமாக்கும் வழியை உனக்குச் சொல்லவா!" என்றாள். அலோக்கின் முகத்தில் சிறு குழப்பமும் அலட்சியமும் தெரிந்தது. "அதோ பார்!" என்று எதிரே இருந்த சுவற்றைக் காட்டினாள் அன்னை. அங்கே சிலுவையில் இயேசு தொங்கும் சுரூபம் இருந்தது. "வலியின் வலிமை அந்தச் சிலுவையில் வெளிப்பட்டது" என்றாள் அன்னை. அலோக் அதைப் புரிந்துகொண்டது போலத் தெரியவில்லை. ஆனால், அவர் அந்தச் சிலுவையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அன்னை தொடர்ந்தாள்... "ஆணியால் அறையப்பட்டஅந்தக் கைகள் விடுதலையை அளித்தன. அந்த முள்முடி வல்லமை மிக்க அரச கிரீடம் ஆனது. சாட்டையால் கிழிக்கப்பட்ட அந்த உடல் ஆன்ம உணவானது.

துளைக்கப்பட்ட கால்கள் உலகை வழிநடத்திச் சென்றன. சிதைந்த அவரது வாயிலிருந்து மன்னிப்பை அவர் வழங்கினார்." அன்னை சற்று நிறுத்தினாள். அலோக்கின் பார்வை சிலுவையின்மீது இருந்தது. (தொடர்ச்சி 5ம் பக்)

# அன்பின் மகிழ்வு




## பிள்ளைகள் குடும்பத்திற்கு மட்டும் உரித்தானவர்கள்

பிள்ளைகள் குடும்பத்திற்கு மட்டுமே உரித்தானவர்கள் அல்ல என்பதனை திருவிவிலியம் மிகச் சிறப்பாக எடுத்தியம்புகிறது. முன்னைய காலத்தில் அண்மைக் கிழக்கு நாடுகளில் பிள்ளைகள் தனிப்பட்ட உரித்தானவர்கள் மட்டுமின்றி, பொருட்களாகவும், குடும்பத்தின் உடமையாகவும் கருதப்பட்டனர். எனவே அவர்களின் தனித்துவம் அல்லது தனித்துவமான உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே இவ்வாறான குழமைவில் பிள்ளைகள், குடும்பத்தின் தலைவரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவராகவும், குடும்பத்தின் பாரத்தைச் சுமக்க வேண்டியவராகவும் மட்டுமே பார்க்கப்பட்டார்கள்.

இந்த நிலையில் திருத்தந்தை, பிள்ளைகள் ஒரு குடும்பத்திற்கு மட்டும் உரித்தானவர்களல்ல. தமக்கானதொரு அடையாளத்தையும் கொண்ட தமக்கானதொரு நோக்கத்தையும், மாண்பையும் கொண்ட தனித்துவமானவர்கள் என்பதனை எடுத்தியம்புகின்றார். காரணம் ஒவ்வொரு குழந்தையும் கடவுளின் சாயலாகவும், பாவனையாகவும் படைக்கப்பட்டவர்கள். எனவே ஒவ்வொரு பிள்ளைகளும் தனக்கெனத் தனிப்பட்ட அடையாளம் ஒன்றைக் கொண்டுள்ளார்கள். எனவே தான் பிள்ளைகள் ஒரு குடும்பத்திற்கு மட்டும் உரிதானவர்களல்ல. மாறாக ஒரு பிள்ளை கடவுள் தன்னைப் படைத்ததற்கான நோக்கத்தைக் குறிப்பாக கிறிஸ்தவ அழைத்தலை நிறைவேற்ற வேண்டிய கடமைப்பாடு உடையவராகக் காணப்படுகின்றார்.

இதனையே திருவிவிலியமும் எடுத்தியம்புகிறது. பிள்ளைகளுக்குக்கான சில சமூக கடமைகள் உண்டு. அவர்கள் கடவுளின் அழைப்புக்குச் செவிமடுக்க வேண்டிய ஆளுமையுள்ளவர்களாக வளர வேண்டியவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஆன்மீக, ஒழுக்க ரீதியாக அறிவு ரீதியாக வளரக்கூடியவர்கள். இதற்கான தகைமைகளைக் கொண்டவர்கள் என்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறான கண்டேணாட்டத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் கட்டுப்பாட்டில், பராமரிப்பில் இருந்தாலும் தங்கள் தகைமைகளையும் திறமைகளையும் வளர்க்க தங்கள் வாழ்வுக்கான தெரிவுகளை மேற்கொள்ள, தங்கள் தனித்துவமான ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்ள சுதந்திரம் உடையவர்கள் என்பதற்கான புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும்.

எனவே பெற்றோர்கள் பிள்ளைகள் மேல் அதிகாரம் செலுத்தாது, அன்போடு அவர்கள் தம் விசுவாசத்தில் வளர, தேர்ந்து தெளிந்து வாழ்வின் சிறந்த முடிவுகளை எடுக்க, பெற்றோர்கள் அன்போடு தம் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும். எனவே இவ்வாறான பிள்ளை வளர்ப்புக்கு சூசை, மரியாள் குழந்தை இயேசு முன்னுதாரணமாக இருக்கின்றனர். சிறப்பாக இயேசுவுக்குப் பன்னிரண்டு வயது நடைபெற்ற போது அவர் தனது குடும்பத்திற்கு அப்பால் ஒரு பெரும் பணியிருப்பதாக தன் பெற்றோருக்கு குறிப்பிடுவது பிள்ளை வளர்ப்பின் மிகச் சிறந்த உதாரணமாகும்.

யாத்திரைக்குப் பின் இயேசு கோவிலில் தங்கி விட்டார். சூசையும் மரியாவும் திரும்பி வந்து பார்த்த போது அவர் கோவிலில் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்பதிலும் கேள்விகளை எழுப்புவதிலும் ஈடுபட்டிக் கொண்டிருந்தார். மிகவும் வேதனையோடும், அங்கலாய்ப்போடும் களைப்போடும் ஆயைத்துக்கு தேடி வந்த சூசையும், மரியாளும், சிறுவன் இயேசுவிடம் "மகனே ஏன் இப்படி எங்களுக்குச் செய்தாய்" என்று கேட்டபோது, இயேசு கொடுத்த பதிலானது அவரின் தனித்துவமான பண்பையும் குடும்பத்திற்கும் மேலாக இன்னுமோர் பணியை தந்தை தனக்கு அளித்துள்ளார் என்பதையும் தெட்டத் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது. அவரின் பதில் "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள் என் தந்தையின் அலுவல்களில் நான் ஈடுபட வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா" இந்தப் பதில் பெற்றோராகிய மரியா சூசைக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தாலும், எதுவுமே அவர்கள் பேசவில்லை. மரியாள் இந் நிகழ்ச்சிகளை எல்லாம் மனதில் இருத்தி வைத்துச் சிந்தித்து வந்தாள் என்று மட்டுமே திருவிவிலியம் கூறுகின்றது.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

இங்கு இயேசுவின் வார்த்தைகளில் மாபெரும் இரகசியம் ஒன்று உண்டு. தன் சொந்த வீட்டுக்கு அப்பாலும் தன் மகனுக்கு இந்த சமூகத்துக்கான பணிகள் உண்டு என்ப தனைப் பெற்றோர் புரிந்து கொண்டு அதற்கு மதிப்பளித்து மகனின் வழியில் அவர் பயணிக்க அனுமதித்தனர். இதுவே ஒரு பெற்றோர் பிள்ளைக்குக் கொடுக்கும் உரிமையும் சுதந்திரமுமாகும்.

எனவே பிள்ளைகளைச் சுதந்திரமாக வளர்த்து, தங்கள் வாழ்வைத் தாமே பொறுப்பேற்கக் கூடிய வகையில் பிள்ளைகளுக்கான சுதந்திரத்தைப் பெற்றொர் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதனை திருத்தந்தை வலியுறுத்துகின்றார். மனிதர்களின் உடனடி சமூகமாகிய குடும்பத்தில் தங்கள் மாண்பை வெளிப்படுத்த, சுயமதிப்புடன் வாழ அவர்களின் உரிமைகள் மதிக்கப்படும் வகையில் வளர விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பிள்ளைகள் தங்களது ஆளுமையை வளர்க்கக் கூடிய வகையில், தங்களது அடையாளத்துடன், பொறுப்பாக தம் நடவடிக்கைகளைத் தாமே எடுக்கக்கூடிய வகையில் வளர்க்கப்பட வேண்டும் என்கிறார் புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்.

பிள்ளைகள் அடிமைகளாக அல்ல மாறாக அவர்கள் சுதந்திர புருஷர்களாக, மாண்புடையவர்களாக நடத்தப்பட வேண்டும். அவர்களின் உயர்ந்த எண்ணங்களை நசுக்கி விடாது அவற்றை வளர்க்கத் துணைபுரிய வேண்டும் எனப் புனித ஜோண் கிறிஸ்தோத்தம் அழைப்பு விடுக்கின்றார்.

புனித சின்னத்திரேசம்மாளின் பெற்றோர் ஓர் சிறந்த கிறிஸ்தவ பெற்றோருக்கான முன்மாதிரிகையாக இருந்த தனால் இவர்கள் 2015இல் புனிதர்களாக உயர்த்தப்பட்டார் கள். மிகவும் முன்னுதாரணமாக கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து, நல்ல கிறிஸ்தவ சூழ்நிலையைக் குடும்பத்தில் அமைத்துக் கொடுத்ததனால் பிள்ளைகள் துறவற வாழ்வைத் தேர்ந்த போதிலும் இவர்களது பெற்றோர் அதற்கு எவ்விதத்திலும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

பெற்றோருக்கு இது ஓர் துன்பகரமானதாக இருந்தாலும் பிள்ளைகளின் சதந்திரமான முடிவை மதித்தார்கள். பல துறவிகளை இக் குடும்பம் திருஅவைக்கு அளித்தது. முக்கியமாக கடைசி செல்லப்பிள்ளையாகிய திரேஸா 15 ஆவது வயதில் துறவற மடத்தில் சேர தீர்மானம் எடுத்தபோது, அது இவர்களின் தந்தைக்குப் பெரும் துயரத்தை ஏற்படுத்தினாலும், தந்தை தன் பிள்ளையின் சுதந்திரத்தை மதித்து, துறவற வாழ்வுக்கு ஊக்கம் கொடுத்தார்.

தன் மனைவி சேவியை இழந்த நிலையிலும் தந்தை லூயிஸ் முற்றிலுமாக தன் பிள்ளையின் தெரிவுக்கு உற்சாகம் கொடுத்தார். தன் பிள்ளைகள் மேல் லூயிஸ் பெரும் பாசம் கொண்டிருந்தாலும், பிள்ளைகளைச் சுயமாக வாழ வைத்து, சுயமாக அவர்கள் தம் வாழ்வின் தெளிவுகளை மேற்கொள்ள வழிசமைத்தார். எப்போதும் தன் பிள்ளைகளைச் சுயமாகச் சிந்திக்க உற்சாகப்படுத்தினார்.

எனவேதான் திருஅவையில் மிகவும் அதிகமாக அன்பு செய்யப்படும் ஒரு புனிதையை, திருஅவை பெற றெடுக்க முடிந்தது. எனவே தான் பெற்றோர் தம் விருப்பு வெறுப்புகளைப் பிள்ளைகள் மேல் சுமத்தாது, பிள்ளைகள் சுயமாகச் சிந்தித்து சுயமாக வாழ திருத்தந்தை அழைப்பு விடுக்கின்றார்.

## வலியின் அன்னை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் முகம் சற்றுத் தீவிரமடைந்திருந்தது. அன்னை தொடர்ந்தாள்: "வலியால் என் னென்ன சாத்தியம் பார்த்தீரா அலோக்!

நீர் முதலில் உம்மை மன்னியும் உம்மையே நீர் மன்னித்ததைப்போல பிறரையும் மன்னியும். அப்போது இந்த வலி இன்னும் அர்த்தமுள்ளதாக மாறும்" என்றாள் அன்னை.

அலோக்கின் கண்களிலிருந்து நீர் நிறைந்து வழிந்து கன்னங்கள் வழியே ஓடியது. அன்னை அதைத் தன் கைகளால் துடைத்தாள். "என் ஆன்மாவிலும் ஒரு முள் தைத்த வலி இருந்து கொண்டே இருக்கிறது அலோக்" என்றாள் அன்னை. அலோக் கண்களைத் திருப்பி அவளை வியந்து பார்த்தார்.

"ம்ம்ம்... நெடு நாள்களாக அந்த வலி என்னுள் பெருகிக் கொண்டே இருந்தது. அதை நான் எப்படிக் கடந்தேன் தெரியுமா?" அலோக் அசைவின்றிக் கிடந்தாலும், அவரது முகத்தில் ஆர்வம் தெரிந்தது.

"கல்கத்தாவிற்கு நான் வந்த புதிதில் ஏழை களின் குடியிருப்பில் ஒரு வீட்டில் பல நாள்கள் சாப்பிடாமல் பட்டினி இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அவர்களுக்குச் சாப்பாடு எடுத்துச் சென்றேன். உடலின் வலிகளைவிட மிகுந்த வேத னையான வலி என்ன தெரியுமா? தன் குழந்தைகள் பட்டினியில் வயிறு வற்றி, மூச்சு விடக்கூடத் தெம்பு இல்லாமல் கிடப்பதைக் காண்பதுதான். அந்த வீட்டின் தாய் அப்படிப்பட்ட வலியில் அமர்ந்திருந் தாள். உணவைக் கண்டதும் குழந்தைகளை எழுப்பி ஆளுக்குக் கொஞ்சம் தட்டில் வைத்துக் கொடுத்தாள். அவர்கள் சாப்பிட ஆரம்பித்ததும், மீதிச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு என்னிடம் சொல்லிக் கொண்டு... (தொடர்ச்சி 7ம்பக்)

# அகவொளி குடும்ப நலமையம்
## திருமண சேவை





### மணமகள் தேவை

வயது : - 35
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- O/L
தொழில் :-வயறிங்
பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்

வயது - 30
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- Be Civil Engineering Moratuwa
தொழில் :- Project Engieer Singapore
பிரதேச செயலகம் :- தெல்லிப்பளை

வயது - 33
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- DIP in Marketing
தொழில் :- உதவி முகாமையாளர்
பிரதேச செயலகம் :-யாழ்ப்பாணம்

வயது - 40
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - NCT (Civil Engineering Quanity Surveying)
தொழில் :- Technical Officer / Maths Tutation Master
பிரதேச செயலகம் :- வலிகாமம் தெற்கு

வயது - 38
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- முகாமையாளர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 30
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- மோட்டார் சைக்கிள் மெக்கானிக்
பிரதேச செயலகம் :- மன்னார்

வயது - 39
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Diploma in hotel management
தொழில் :- Hotel ஊழியர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

### மணமகன் தேவை

வயது - 30
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - MBBS
தொழில் :- வைத்தியர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 34
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - HNDT
தொழில் :- Technical Officer
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 27
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Master of Environmental Management
தொழில் :- Executive Resercher in Galle
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கங்கள் 077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.**



# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா,அமதி

(கண்ணன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: அநுரகுமார திசாநாயக்க அவர்கள் இலங்கையின் 9வது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றார்? இவரின் தெரிவை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

ப: கண்ணன், அனுரகுமார எதிர்பார்க்கப்பட்டவர்தான். நிற்க, கொள்ளை அடிப்பவர்களையும், ஊழல் பேர்வழிகளையும் இல்லாமல் செய்தாலே நாடு எதிர்நோக்கும் தற்போதைய பெரும் பிரச்சினை நீங்கிவிடும். அந்த வகையில், ஜனாதிபதி அநுரகுமார அவர்களின் தொடக்க ஆட்டமே அசத்தலாக இருப்பதால் அவருக்கு நமது கைகளை நீட்டவேண்டும் என நினைக்கின்றேன்.

*(ஞானம், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: ஒருசில மாத காலப்பகுதியிலேயே சங்கு, எதிர்பார்த்ததைவிட அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டது. 'சங்கே முழங்கு' என்றெல்லாம் உங்கள் எழுத்துக்களில் கூறியிருந்தீர்கள்! நீங்களும் அரசியல் ஞானம் உள்ளவர் போலத்தான் தெரிகின்றது! அப்படியா?**

ப: ஞானம், நீங்கள் சொல்வதுபோல எனக்கு அரசியல் ஞானம் இருக்கிறது என்பது உண்மைதான்! ஆனால், சிலரை ஆதரிக்கும்படி மேடைபோட்டுக் கத்திய எங்கள் அரசியல் பிரதிநிதிகளின் ஞானத்தைப் போலல்ல! அந்த ஞானத்துக்குக் கிட்டக்கூட நாங்கள் வர ஏலாது!

*(றோய், மன்னார்)*

**கேள்வி: கடன்களை அள்ளி அள்ளிக் கொடுத்து மக்களிடம் இருப்பதையும் சுரண்டிக்கொண்டு போவதுதான் 'லீசிங் கொம்பனி'களின் நோக்கமா?**

ப: றோய், சுவாரசியமான சம்பவம் ஒன்று நம் மக்கள் மத்தியிலே சொல்லப் பட்டு வரப்படுகிறது. இதனை யாரும் குறையாக எடுக்காமல், இச்சம்பவத்திலிருந்து பாடத்தைக் கற்றுக்கொண்டு, சிரித்து விட்டுச் செல்லுங்கள்! யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவு என்ற ஓர் ஊர் இருக்கிறது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் வணிகம் செய்பவர்களாக இருந்திருக்கின்றார்கள் - இருக்கின்றார்கள். இவ்வூரில் புகையிலைப் பயிர் நன்கு வளரும். இவ்வூர் மக்கள் புகையிலைப் பயிரை யாழ்.மாவட்டத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். இப்படித்தான்,ஒருமுறை புகையிலை வியாபாரி ஒருவரிடம் தன் புகையிலைகளை விற்று நட்டப்பட்டுப்போன ஒரு விவசாயி ஒரு மாலை வேளைப் பொழுதில் குளிப்பதற்காகத் தன் ஆடைகளைக் கழற்றி குளக்கரையில் வைத்துவிட்டுக் குளித்திருக்கின்றார். குளித்து விட்டு வந்து ஆடைகளைப் பார்த்தால் அவை களவாடப்பட்டுள்ளதை அவதானிக்கின்றார். இந்நிலையில், அவ் விவசாயி கச்சை கட்டியபடி, கவலையோடு வீடுசெல்லுகிறபோது, வழியில் முருகப் பெருமானின் சிலையைக் காண்கின்றார். முருகப் பெருமானும் கோவணம் கட்டிய நிலையில் வெற்றுடலோடு காணப்பட்டிருக்கின்றார். உடனே அவ்விவசாயி மிகுந்த கவலையுடன் முருகப் பெருமானைப் பார்த்து, "முருகா நீயும் புங்குடுதீவானுக்குப் போயிலை விற்றனியோ!?" என்று கூறியதாக ஒரு சம்பவம் இருக்கிறது. அவ்விவசாயியின் நிலையைப் போலத்தான் 'லீசிங் கம்பனி'களில் கடன் பெறுபவர்களின் நிலைமையும் இன்று இருக்கிறது! கவனம் மக்களே! கட்டியிருக்கும் கோவணத்தையும் கழற்றிக்கொண்டு போய் விடுவார்கள் இந்த 'லீசிங் கம்பனி'க்காரர்கள்!

*(சாரு, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: இன்று பல இளம் குடும்பங்களில் சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கு எல்லாம் மணமுறிவு என்ற நிலைக்குச் சென்றுவிட அடிப்படையாய் அமையும் காரணம் என்ன?**

ப: சாரு, பல காரணங்கள் உண்டு. அடிப்படையில், 'நானா நீயா?' 'தான் பிரச்சினை! ஆராய்ந்து பாருங்கள், உண்மை புலப்படும்!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: பழம்பெரும் கட்சியான தமிழரசுக் கட்சி பிஞ்சு துண்டுதுண்டாகக் கிடக்கின்றது. எதிர்காலம் என்னாகுமோ!? அத்துடன் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை அதன் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் காலத்தில் மாறி-மாறிக் கூறியிருக்கின்றார். இக்கட்சிக்கு என்னதான் நடக்கின்றது?**

ப: அன்ரன், தமிழரசுக் கட்சி தந்தை செல்வா அவர்களின் எண்ணத்தில் உருவான ஒரு கட்சி. மிகத் தூய்மையான இலக்கோடு, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுத் திகழ்ந்த காலம் ஒன்றிருந்தது. பின் ஆயுதப் போர் காலத்தின் பேச்சுவார்த்தைக் காலப் பகுதியிலும் தமிழரசுக் கட்சித் சின்னத்திலேயே வடகிழக்கு மக்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் இருந்தது. பின்னர் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் படிப்படியாக 'வில் எடுத்தவன் எல்லாம் வேட்டைக்காரன்' என்ற நிலைப்பாட்டில் இன்றைய அரசியல் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தமிழரசுக் கட்சி இன்றைய அரசியல் சூழலில் வழிகாட்டியிருக்க வேண்டிய கட்சி. ஆனால், அது தன் கட்டுப்பாட்டை இழந்து, கண்ணியத்தைத் தொலைத்து, கடமையை உதாசீனம் செய்திருக்கின்றது. அதனால், தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் என்னாகும் என்றால்: ஒற்றுமைப்பட வேண்டும் என்பதை உணர்ந்து இவ் விறுதிச் சந்தர்ப்பத்தில் ஒன்றுபட்டு நின்றாலே தவிர, நாளடைவில் இக்கட்சி சூனியமாகும் என்பதற்கான அடையாளங்கள் தோன்றத் தொடங்கி உள்ளன. உண்மையில், மாவை அவர்கள் பாவம்! அவருக்கு எப்போதோ அறளைபேந்து போயிற்று. அவரை வைத்துச் சிலபேர் பொம்மலாட்டம் நிகழ்த்த நினைக்கிறார்கள். அவரால் இப்போது என்ன செய்யமுடியும்! அவர் இப்போது இரண்டாம் குழந்தைப் பருவத்தில் இருக்கின்றார். மாறி மாறிக் கதைக்கத்தான் முடியுமே தவிர அரசியல் செய்ய முடியாது!

(ராசா, யாழ்ப்பாணம்)

**கேள்வி: 2024 நாட்டின் 9வது சனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் ஒரு பகுதி சஜித் பிறேமதாசாவையும், இன்னுமொரு பகுதி தமிழ்ப் பொது வேட்பாளரையும், இக்கட்சியின் மேலுமொரு பிரிவு மேலே குறிப்பிட்ட இருவரையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ரணில் விக்கிரமசிங்காவையும், சில தனிப்பட்டவர்கள் அநுரகுமார திசாநாயக்கவையும், சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியம் - தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு தமிழ்ப் பொது வேட்பாளரையும் ஆதரிக்கும்படி கேட்க, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் படியும் கேட்டிருந்தார்கள். இப்பின்னணியில், நமது அரசியல் பிரதிநிதிகளின் அரசியல் சாணக்கியத்தைப் பற்றிய தங்களின் கருத்தென்ன?**

ப: கனபேருக்குப் புத்தி பேதலித்துப் போய் விட்டது! தாங்கள் செய்த சேவைகளுக்கெல்லாம் மக்கள் நன்றிகூறுகின்றார்கள். இவர்கள் தாமாகவே தேர்தல்களில் போட்டியிடாது நீங்கிக் கொள்வது மேலதும் மரியாதைக்குரியதும் ஆகும். அப்படி இல்லையென்று தேர்தலில் நின்றால் இவர்களை மக்கள் நிராகரிப்பது அவசியமானது.

*(பேனாட், வவுனியா)*

**கேள்வி: 'என் கேள்விக்கென்ன பதில்' வெற்றிகரமாகச் சென்று கொண்டிருக்கின்றது. அதேவேளை 'அன்புள்ள ஆரிய சிங்க'வுக்கு உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் அமோக வரவேற்பும் அறிமுகங்களும் கிடைத்திருக்கின்றன! நிற்க, தமிழ்த் தேசியக் கட்சிகள் சுயநலத்துடனும் திட்டமிட்ட குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்றன. இப்படியாக நம் தேசம் போகின்ற போக்கைப் பார்த்தால் 'அன்புள்ள இந்திரன்' என்றொரு தொடரை எழுதவேண்டி வரலாம். அப்படி ஒரு கடிதம் தொடர் எழுத வேண்டி வந்தால் எப்படி எழுதுவீர்கள் என ஒரு மாதிரிக் கடிதம் ஒன்று வரைய முடியுமா?**

ப: ஐயா பேனாட், உங்களுடைய கேள்வி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் கிடைத்தது. தேர்தல் சூடு பிடித்திருந்ததால் தேர்தல் முடிந்த கையுடன் எழுதுவது பொருத்தமாக இருக்குமென இருந்துவிட்டேன்! அன்புள்ள இந்திரன், எப்படி இருக்கிறீர்கள்? புதிய ஜனாதிபதியும் தெரிவாகி 'சிக்சர் சிக்சரா' அடிக்கிறார். வடமாகாண நிலைமைகள் எப்படி? 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று சிறுவயது தொடக்கம் கேட்டு வந்தவன் நான். இப்பாடலை நான் விரும்பியதற்கான காரணம் தமிழரின் வீரத்தைக் கூறுவதால் மட்டுமல்ல, தமிழரின் உயர்ந்த உலகளாவிய பண்பாட்டைச் சுட்டுவது போல இருப்பதனாலும்தான். இன்றைய ஈழத் தமிழனின் நிலைமையைப் பார்த்தால் தலை கவிழ்ந்து நிற்கவேண்டிய நிலைக்குத்தான் தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களாகிய நம்மைக் கொண்டுவந்து விட்டிருக்கிறாங்கள், இந்திரன். அரசியல் தீர்வை தீபாவளி, பொங்கல் நாட்களில் எதிர்பார்த்து எதிர்பார்த்துச் சனம் களைச்சிப் போட்டுதுகள்! வடக்கின் வசந்தம் வாடிக் கருகிப் போயிற்றுது. கிழக்கின் உதயம் அஸ்தமனமாகிட்டுது. இந்நிலையில், தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவம் செய்து வந்த 'தமிழ்த் தேசியக் கூட்டணி' உடைந்து, தமிழ்த் தேசியக் கூட்டணியின் முக்கிய ஒரு கட்சியான தமிழரசுக் கட்சி தனியாகவும் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் வேறாகவும் இயங்கி வந்தன. இப்போது தமிழரசுக் கட்சியும் தனது தலைமைக்கான சர்வதேசப் போட்டியில் பங்கேற்று சிதறுண்டுபோய்ச் சின்னாபின்னமாய்க் கிடக்குது. கடந்தகால நாடாளுமன்ற, பிரதேச சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று தம்மை அடையாளப் படுத்தும் கட்சிகளும், தமிழ்த் தேசியக் கட்சிகளாகத் தம்மை அடையாளப்படுத்தாத கட்சிகளும், சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிட்டு அல்லது பேரினவாதக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டு அரசை ஆதரிப்பவர்கள் எனப் பல கூறுகளாகத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பிளவுபட்டுக் குற்றுயிராய்க் கிடக்கின்றது. ஒட்டுமொத்தமாக அனைத்துக் கட்சிகளையும் மக்களின் அரசியல் பிரதிநிதிகளையும் எடுத்துக் கொண்டால், அனைத்துக் கட்சிகளும் அதன் பிரதி நிதிகளும் பச்சைச் சுயநலத்திற்காக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காது 'கொள்கை' என்று சுயலாபக் கொள்கைகளைத் (தம் பைகளை நிரப்பும் கொள்கைகளை) தங்களுக்குத் தாங்களே வகுத்து தமக்கிடையில் பிளவுகளை உருவாக்கித் தமிழ் மக்களின் அபிலாசைகளைச் சின்னாபின்னமாக்கி வைத்திருக்கிறார்கள். இந்நிலையில் இந்திரன், ஒரு புதிய விடியல் ஈழத் தமிழருக்கு வேண்டுமென்றால் பழைய அறளை பெயர்ந்துபோன, படித்தும் ஞானமில்லாத தலைமுறையை ஓய்வெடுக்க விட்டுவிட்டு புதிய, கொஞ்சம் படித்த, பண்புள்ள, மக்களின் நோவுகளைஉணரக்கூடிய,மக்களின்அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய, மதுசாலைகளுக்கு அனுமதி வாங்காத, மணிவிற்று பிளைப்புத் தேடாத, பிதற்றித் திரியாத, மக்கள் மைய பிரதிநிதிகளை நாடாளுமன்றம் அனுப்புவது இன்றியமையாதது. மாறாட்டக் கதை கதைக்கின்ற தலைமுறைக்குச் சங்கூதுவதோடு, 'சங்கே முழங்கு' என நாடாளுமன்றத் தேர்தலிலும் சங்கை முழங்க வைப்பது - அதாவது தமிழ்ப் பொதுக் கட்டமைப்பை வலுப்படுத்துவது தமிழ் மக்கள் முன்னிருக்கும் தற்கால தலையாகிய கடமை என நான் நினைக்கின்றேன், இந்திரன்! இதனைச் செய்தால் இனம் வாழும், இல்லையென்றால் தாழும்!

இதுபற்றித் தொடர்ந்து ஆக்கபூர்வமாகப் பேசுவோம் இந்திரன்.

## அன்பு செய்வோம் முதியோரை

குடும்பம் ஒரு கோயில் என அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். குடும்பத்தின் அங்கமாக மூத்தோர் முன்னிருந்து முறைப்படுத்தி வழி நடத்தும் குடும்பம் ஒரு கோயில் என்பது நிதர்சனம்.

சிறு புன்னகை, சிறு சிறு அன்பு முயற்சிகள், சகிப்புத்தன்மை இவை இருந்திருந்தால் இன்று முதியோர் இல்லங்கள் வெகுவாகக் குறைந்திருக்கும். தற்கால நடைமுறையில் குடும்பத்தில் மூத்தோரின் உடனிருப்புப் பற்றி புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொள்கின்றனர்.

சிறு சிறு அன்பு முயற்சி திரு அவையின் புனிதராக மாற்றியது சின்னத் தெரேசாளை. நம் இல்லங்களில் நம் தாத்தா, பாட்டி, தாய், தந்தையரைப் போற்று வோம். நம்மை வளர்த்த தால் தளர்ந்துள்ளவர்கள் அவர்கள். அவர்களை என்றும் மதிப்போம்: அன்பு செய்வோம்.

## "வானதூதர்கள்"

அதிதூதர்களான புனித மிக்கேல், கபிரியேல், இராபேல் ஆகியோரின் விழாவை இவ்வாரம் கொண்டாடுகின்றோம். படைப்பின் தொடக்கத்திலிருந்து மீட்பின் வரலாறு முழுவதிலும் வானதூதர்கள் உடனிருந்து இறைசெய்தியை அறிவித்துக் கடவுளின் திட்டம் நிறைவேறத் துணை புரிந்தவர்கள். அவர்கள் வெளிப்படுத்தும் இறைத் திருவுளத்தை வாழ்வாக்குவது நம்மைக் கடவுளின் செல்லப் பிள்ளைகளாக மாற்றும். நம் திரு அவைத் தலைவர்களும், நம் முன்னோரும் நமக்குச் சொல்லிக் கொடுத்த 'சம்மனசுகள், வானதூதர்கள்' பற்றிய செய்திகளை இன்றைய தலைமுறையினருக்கும் சரியாக எடுத்துச் சொல்ல வேண்டியது நமது கடமையாகும்.

## ஜெத்செமினியின் பயணப் பாதை

இன்று
புலம்பெயர்வின்
வலி சுமந்த எம்
வாழ்வாதாரப் பாதைகள்
இன்னும்
திறக்கப்படாமலேயே
இருக்கின்றது

ஒலிவமரக் கிளைகளையல்ல
வலிந்து அழிக்கப்பட்ட
சுலோக அட்டைகளைத்
தாங்கி நிற்கின்றோம்

தூர்ந்து போய்விட்ட எம்
அன்பியல் வாழ்வுக்குள்
தறிகெட்டுப் போய்விட்ட
தலைமைகளும் எம்
தலைவிதிக்கு
மகுடச் சூட்டுவிழா
நடத்துகின்றது

நாம் இன்று
ஜெத்செமினியின்
பயணப் பாதையில்
நடப்போம்
சில மணித்துளிகள் கூட
விழித்திருந்து
செபிப்பதற்காக

எம்.யோண்பற்றிக்

# சிறுவர்களை அறிவோம்



சிறுவர்கள் சிறகடிக்கும் பட்டாம் பூச்சிகள். கனவுகளிலும், கற்பனைகளிலும் தம் சிந்தனைகளைச் சீரமைத்துப் படைப்பாற்றல் திறனை வளர்த்துக் கொள்பவர்கள். வருங்காலத்தின் பெறு மதிமிக்க சமூகச் சொத்துக்கள். புதுயுகம் படைத்துப் புதுமைகள் புரிய வேண்டிய அறிவையும், ஆற்றலையும் தமது ஆரோக்கியமான சிறுபராயத்தினூடாகக் கட்டியெழுப்பிக் கொள்பவர்கள். இத்தகைய சமூகச் செல்வங்களுக்கு ஆரோக்கியமான அழகான சிறு பராயத்தை வழங்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும், ஆசிரியர்களினதும் ஆன்மீக மற்றும் சமூக நிறுவனங்களினதும் கட்டாயமான கடப்பாடாகும்.

எனது சிறுபராயத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். என்னுடைய ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய எனது பெற்றோர், எனது சகோதரர்கள், எனது வீட்டின் சூழமைவு, எனது அயலவர்கள், யாழ் கன்னியர்மடம் பாடசாலை என ஒன்றன் பின் ஒன்றாக எனது நினைவுகளுள் கிளர்ந்தெழுகின்றன.

இன்றைய எனது ஆளுமை, சிந்தனைகள், நேர்மை, உண்மை, அன்பு, பகிர்தல் போன்ற விழுமியப் பண்புகள் எவ்வளவு அழகாகக் கட்டியெழுப்பப் பட்டன என்பது புரிகிறது. அறிவியல், அறியா உளவியல் கற்காத அன்றைய சமூகம் என்னை அழகாகச் செதுக்கியது. நன்றியுடன் ஒவ்வொருவரையும் நினைவு கூரும் நான் எனது அடுத்த சந்ததிக்கு வழங்கக்கூடிய சில அறிவுக் கூறுகள் இங்கே...

### சிறுவர் உளவியல் என்றால் என்ன?

- பொது உளவியல் தலைப்புக்களில் ஒன்றாகக் கருதப்படும் சிறுவர் உளவியல் பரந்த பரப்பினைக் கொண்டது.
- கருவிலிருந்து சிறுபராயம் முழுவதிலும் படிப்படியாக விருத்தியடைந்து செல்லும் தனிநபரின் உடல், உள, மன வெழுச்சி, சமூக மற்றும் ஒழுக்க விருத்தி தொடர்பான அறிவியல் சார்ந்த விடயங்களை, விஞ்ஞானபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் முன்வைப்பது சிறுவர் உளவியலாகும்.
- சிறுவர்களின் விருத்தியில் முக்கிய மைல் கற்கள் பற்றி சிறுவர் உளவியல் குறிப்பிட்டுக் கூறுகிறது.

### சிறுவர்கள் வளர்ந்தோரிலும் வேறுபட்டவர்கள்.

- சிறுவர்களின் சிந்தனைகள் தனிப்பட்டவையும் சிக்கலானவையுமாகும். அவர்கள் பெரியவர்களைவிட வித்தியாசமாகச் சிந்திக்கின்றார்கள்.
- சிறுவர்களின் சிறுபராய வாழ்க்கை அனுபவங்களே அவர்களின் வாழ்க்கை முழுவதும் செல்வாக்குச் செலுத்துகின்றன.
- சிறுவர் உளவியல் பிரயோக உளவியலாகப் பல பாடப்பரப்புக்களிலும், பல விடயத் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகிறது.
- சிறுவர் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகிறது.

### சிறுவர் உளவியலின் முக்கியத்துவம்.

- குடும்ப உளவியலில் பிள்ளை வளர்ப்பு பற்றிய அடிப்படைத் தகவல்களை வழங்குவதுடன் நேரடியான செல்வாக்கைச் செலுத்துகிறது.
- கல்வி உளவியலில் ஆசிரிய மாணவ உறவு பேணப்படுதல், தனியாள் வேறுபாட்டைக் கண்டறிதல் போன்ற பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்கிறது.
- மாணவர்களின் மொழித்திறன் விருத்தி, ஆக்கத்திறன் விருத்தி அழகியல் ஈடுபாடுகள் போன்றவற்றை இனங்கண்டு வளர்ப்பதற்கு ஆசிரியருக்கு உதவுகின்றது.
- பிள்ளைகளை அறஒழுக்கத்தில் வளர்ப்பதற்கும் சமூகமயமாக்கலுக்கும் சிறுவர் உளவியல் பங்களிப்புச் செய்கிறது.
- பிள்ளைகளின் சுயமரியாதையைப் பேணி கண்ணியமாக நடத்த வேண்டிய தேவையைப் பூர்த்தி செய்யச் சிறுவர் உளவியல் துணை செய்கிறது.
- சமூக அழுத்தங்களிலிருந்து பிள்ளைகளை வெளிக் கொணர சிறுவர் உளவியல் பயன்படுத்தப்படுகிறது.
- ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தோன்றக் கூடியபாடசாலை அச்ச உணர்விலிருந்து விடுபட செய்வதற்கு அவசியமானது.
- பெற்றோர் பிள்ளைகள் மிதமிஞ்சிய பிணைப்புகாரணமாக அல்லது பிளவுபட்ட குடும்பங்கள் காரணமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உதவுகிறது.

### சிறுவர் பராயத்தின் 3 கட்டங்கள்

- குழந்தைப் பருவம்
- பிள்ளைப் பருவம்
- கட்டிளமைப்பருவம்



### சிறுவர் விருத்திப் பரப்புக்கள்

- உடல் இயக்க விருத்தி
- அறிகை விருத்தி
- மொழி விருத்தி
- சமூக மனவெழுச்சி விருத்தி
- அழகியல் கலையாற்றல் விருத்தி

**பப்சி மரியதாசன்**

சிறுவர்களின் வாழ்க்கைக் கட்டங்களையும், ஒவ்வொரு கட்டங்களிலும் ஏற்படக் கூடிய விருத்தி நிலைகளையும் புரிந்து கொண்டு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், மனவெழுச்சி மட்டங்களிலும், சமூக மற்றும் ஒழுக்கம் தொடர்பாகவும் பொருத்தமான அனுபவங்களை மூத்தோராகிய நாம் வழங்க முற்பட வேண்டும். அப்போது தான் ஆரோக்கியமான ஆளுமையுள்ள எமது சந்ததியை உருவாக்க முடியும். நாளைய தலைவர்களை உருவாக்கும் முயற்சியில் இன்றைய மூத்தோர் பங்களிப்புச் செய்வார்களா?


## நீங்கா நினைவுகளுடன்...

'ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர் நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவர்' (திருப்பாடல் 93:13)

### விண்ணக வாழ்வில்
### 20ம் வருடநினைவஞ்சலி

பிறப்பு 26 . 04 . 1923

இறப்பு 25 . 09 . 2004



அமரர்

### றெஜீனம்மா செபஸ்தியாம்பிள்ளை

(இராசம்மா)

'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்' (யோவான் 11:25)

அம்மா நீர் மறைந்து ஆண்டுகள் இருபது, உணர்கின்றோம் இன்றும் எம் மனதில் நீர் இருப்பது.
நீர் எதிர்பார்த்தபடி ஒற்றுமையாய் வாழ்கின்றோம் , உமது ஆசியுடன் நலமாக வாழ்கின்றோம்.

இருந்தாலும் ஒரு குறை எம் மனதில் இன்றும் உண்டு,
அம்மா நீர் எம்முடன் இல்லை என்ற குறைதான் அது.
பெற்று வளர்த்து எம்மைப் பேணிக்காத்த அம்மா,
உமக்கிணையாய் எமக்கிங்கு யாரும் இல்லை அம்மா.
இரவுகளில் உமது முகம் காண்கிறோம் கனவுகளில்,
நிறை குறையை உம்முடன் பகிர்ந்து நாம் வாழ்கின்றோம்.
உந்தன் கிளைகளில் பூத்தபூக்களும், பூக்களின் பூக்களும் உம் புகழ் கேட்டறிந்து
மகிழ்ந்தும்மைப் போற்றுகிறார்.இறைவனின் பாதத்தில் நீரும் ஐயாவும் , மலர்களாய் வீற்றிருந்து
எமக்காக வேண்டிடுவீர்.

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள, பூட்டப்பிள்ளைகள்.

49 போயிட்டி- இளவாலை


## வலியின் அன்னை

(05ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே கிளம்பினாள். நான் அவளிடம் "எங்கே போகிறாய்?' என்று கேட்டேன். 'அவர்களும் பசியாய் இருக்கிறார்கள்' என்று பக்கத்து வீட்டை கைகாட்டினாள்." அலோக்கின் முகத்தில் அமைதியான புன்னகை. அவரது முகத்தின் இறுக்கம் தளர்ந்தது. அன்னை தொடர்ந்தாள்: "என் ஆன்மாவில் தைத்த அந்த முள் அவ்வப் போது அசைந்து என்னைச் சோதித்து வலி உண்டாக்கும்போது, அந்தத் தாயை நினைவு கூர்வேன். எனக்குக் கட்டளையிடப்பட்ட கடமையைச் செய்தேன் ஆனால், அவள் தன் வலியிலும் பிறரைப் பற்றியே நினைத்தாள். வலியை வெல்ல மற்றொரு வழி, அந்த வலியைப் பிறருக்காக ஒப்புக் கொடுப்பது. பிறருக்காக அதை நீர் ஏற்றுக் கொண்டால் அது அர்த்தமுள்ளதாக மாறும்." அலோக்கின் முகத்தில் இப்போது ஒரு தெளிவு தெரிந்தது. அவர் தன் சக்தியைத் திரட்டி "முள்.. முள் என்று முனகினார். அன்னை புரிந்து கொண்டாள்."என் ஆன்மாவில் தைத்த முள் எது என்று தானே கேட்கிறீர்? அதை நான் வெளியே யாரிடமும் சொன்னதில்லை. உம்மிடம் மட்டும் சொல்கிறேன்." அன்னை குனிந்து அவரின் காதருகே சென்று தன் மனத்தைத் திறந்து தாழ்ந்த குரலில் அந்த உண்மையைச் சொன்னாள். சொல்லி முடித்து நிமிர்ந்து அமர்ந்த அன்னை விழி நிலைத்து, புன்னகையுடன் இறந்துபோன அலோக்கின் முகத்தைப் பார்த்தாள் கண்களை மூடி, கைகளைக் குவித்துச் செபிக்க ஆரம்பித்தாள்.


நீங்கா நினைவில் 1வது ஆண்டு



அமரர்

### குமாரகுலசிங்கம் ஞானமணி

மண்ணில் 1940.02.21 விண்ணில் 2023.09.22



உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்: அவர்கள் எந்நாளும் உம்மைப்புழ்ந்து கொண்டே இருப்பார்கள் (திபா. 84:4)

சீவியத்தில் எம்மை நேசித்தவர்களே மரணத்திலும் எம்மை மறவாதீர்கள்.

பிரிவுத் துயர் தாங்கா குடும்பத்தினர்

நீங்கா நினைவில் 1வது ஆண்டு



அமரர்

### குமாரகுலசிங்கம் எதிர்வீரசிங்கம்

மண்ணில் 1957.09.03 விண்ணில் 2023.08.23

29 கடற்கரை வீதி, நாவாந்துறை,யாழ்ப்பாணம்

50

## யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத் திருவிழா



யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்தகுமார் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 08ஆம் திகதி நடைபெற்றது. கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்த நாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 07ஆம் திகதி நற்கருணை விழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ்.மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களும் தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்தனர். திருவிழா அன்று மாலை அன்னையின் திருச்சொருபத் தேர்ப்பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

## மானிப்பாய் திருக்குடும்ப இளையோருக்கான திருயாத்திரை



மானிப்பாய்திருக்குடும்ப கன்னியர் மட அருட்சகோதரிகளால் முன்னெடுக்கப் பட்டமானிப்பாய் திருக்குடும்ப இளையோருக்கான திருயாத்திரை கடந்த 16,17ஆம் திகதிகளில் நடைபெற்றது. அருட்சகோதரி நீற்றா அந்தோனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இளையோர் மன்னார் மறைமாவட்டத்திற்கு திருயாத்திரை மேற்கொண்டு மருதமடு அன்னை திருத்தலம், சிப்பியாறு பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலயம், புனித செபஸ்தியார் பேராலயம், தோட்டவெளி வேதசாட்சிகள் ஆலயம், வங்காலை புனித அன்னாள் ஆலயம், முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயம், பள்ளிமுனை பெருக்கு மரம், மாந்தை, அல்லிராணிக்கோட்டை ஆகிய இடங்களை தரிசித்தனர். இந்நிகழ்வில் 33 இளையோர் பங்குபற்றி பயனடைந்தனர்.

## புனித ஆரோக்கியநாதர் அறநெறி பாடசாலைக்கான" அடிக்கல் நாட்டும் நிகழ்வு



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தினால் வட்டக்கச்சிப் பங்கின் இராமநாதபுரம் புனித ஆரோக்கிய நாதர் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள "புனித ஆரோக்கியநாதர் அறநெறி ப்பாடசாலைக்கான" அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெற்றது. கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்தந்தை செபஜீவன் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வட்டக்கச்சி பங்குத் தந்தை அருட்தந்தை சுலக்சன் அவர்கள் கலந்து புதிய அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். இக்கட்டடத்திற்கான அனுசரணையை நெதர்லாந்து நாட்டின் ACNS நிறுவனம் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## துன்னாலை புனித சதாசகாய அன்னை ஆலயத் திருவிழா



கரவெட்டி, துன்னாலை புனித சதாசகாய அன்னை ஆலய வருடாந்த த்திருவிழா பங்குத்தந்தை விஜின்ரஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 08ஆம் திகதி நடைபெற்றது. 01ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 07ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை யாழ். அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை ம.டேவிட் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை அச்சுவேலிப் பங்குத்தந்தை அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## தேசிய இளையோர் வாரம் செம்பியன்பற்று



தேசிய இளையோர் வாரத்தை முன்னிட்டு செம்பியன்பற்று சென் பிலிப்நேரிஸ் மற்றும் நெல்லியான் சென் யூட் இளையோர் ஒன்றியத்தினரால் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 08ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை யஸ்ரின் ஆதர் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் அமலமரித்தியாகிகள் சபை அருட் சகோதரர் ஜெனிஸ்ரன் அவர்களின் உதவியுடன் செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அன்றைய தினம் காலை சிறப்புத் திருப்பலியும் தொடர்ந்து மாலை இளையோருக்கான தீப்பாசறை நிகழ்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் 30 வரையான இளையோர் பங்குபற்றியிருந்தனர்.

## தேசிய இளையோர் வாரம் நாவாந்துறை



தேசிய இளையோர் வாரத்தை முன்னிட்டு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வுகள் கடந்த 01ஆம் திகதி தொடக்கம் 08ஆம் திகதி வரை நடைபெற்றன பங்குத்தந்தை யேசுரட்ணம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் ஒன்றியத் தலைவர் செல்வன் சியோன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு திருப்பலி, வழிபாடுகள், நற்கருணை ஆராதனை, இளையோர்களுக்கான கருத்தமர்வு என்பன இடம்பெற்றதுடன் இளையோர் கிளிநொச்சி புனித திரேசம்மாள் ஆலயத்தைத் தரிசித்து அங்குள்ள வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைத்தனர். தொடர்ந்து மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வும் விளையாட்டுக்களும் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் 20 வரையான இளையோர் பங்குபற்றியிருந்தனர்.

## பாசையூர்ப் பங்கில் முதல்நன்மை அருட்சாதனம்



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 07ஆம் திகதி நடைபெற்றது. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 33 சிறார்கள் முதல்நன்மை பெற்றுக்கொண்டார்கள்.

## ஆனைக்கோட்டை பங்கில் முதல்நன்மை அருட்சாதனம்



ஆனைக்கோட்டை புனித அடைக்கல அன்னை ஆலயத் தில் பிள்ளைகளுக்கான முதல் நன்மை அருட் சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை ஞானப்பிரகாசம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 01ம் திகதி நடைபெற்றது. 15 சிறார்கள் முதல் நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

## திருச்சிலுவை துறவியர்களின் திருவிழா



திருச்சிலுவைக் கன்னியர்களின் திருவிழா கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை யாழ். கடற்கரை வீதி திருச்சிலுவை கன்னியர்மட சிற்றாலயத்தில் நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

## கொக்குளாய், முகத்துவாரம் மற்றும் அளம்பில் பங்குப் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல்



கொக்குளாய், முகத்துவாரம் மற்றும் அளம்பில் பங்குப் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு அளம்பில் பங்குத்தந்தை அருட்தந்தை எமில் போல் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 59 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

## கரவெட்டியில் புனித வின்சன் டி போல் சபை வருடாந்த பொதுக்கூட்டம்



கரவெட்டி புனித அந்தோனியார் பந்தி புனித வின்சன் டி போல் சபை வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 14ஆம் திகதி கரவெட்டி திரு இருதய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கரவெட்டி பங்குத்தந்தை அருட்தந்தை விஜின்ரஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் திரு.ஞானப்பிரகாசம் தேவதாஸ் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். இக்கூட்டத்தில் சபையின் கடந்தகால எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை நேசநாயகம், பொதுப்பந்தி அங்கத்தவர்கள் பருத்தித்துறை மறைக்கோட்ட பங்கு பிரதிநிதிகளென பலரும் கலந்துகொண்டனர்.

## வலைப்பாடுப் பங்கில் மறை ஆசிரியர் – மாணவர்களுக்கான கருத்தமர்வு



கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையமும் இணைந்து வலைப்பாடுப் பங்கில் முன்னெடுத்த மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான சிறப்பு நிகழ்வு கடந்த 14ஆம் திகதி வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெற்றது.

வலைப்பாடுப் பங்குத்தந்தை அருட்தந்தை எரோனியஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் வழிநடத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகள், குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் 150 மாணவர்களும் 16 மறையாசிரியர்களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360. பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு புரட்டாதி மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.